45.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4 ல் உள்ள 15 வார்டுகளிலும் மொத்தம் 39673 குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களும் 5258 உள்ளதுதற்போது . அடிக்கடி மழை பெய்து வருவதாலும் கொசு பருவமழை துவங்க இருப்பதாலும் பழைய .முக்கியமாக வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாகும் .பெருக்கம் ஏற்படக்கூடும் டயர்கள், உடைந்த பொருட்கள் உபயோகமற்ற பொருட்கள் சிறிய கொள்கலன்கள், ஆகியவற்றில் மழைநீர் தேங்காமல் தொடர்ந்து கண்காணித்து அகற்றுவது முக்கியமான பணியாகும்ஆகவே பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்தியல் துறை .) .இயக்குநர் அவர்கள் தெரிவித்த அளவுகோளின்படி300 குடியிருப்புகளுக்கு ஒரு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர் என்ற விகிதத்தில் (6 Day Block-முறையில் 104 கொசுப்புழு)4hours/day) (Domestic Breeding Checkers) நியமனம் செய்து ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட குடியிருப்புகளை ஒரு நாளைக்கு)50 குடியிருப்புகள் தினசரி ஆய்வு செய்து (கொசுப்புழு உருவாரும் மூலங்களை கண்டறிந்து அகற்றி, டெங்கு கொசு உற்பத்தியை பற்றியும் அதனை தடுக்கும்முறை

பற்றியும் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது மேற்கண்ட பணிக்கான ஒப்பந்த காலம் வரும் 30.09.2026-ல் முடிவடைவதால் இந்த டெங்கு நோய் தடுப்பு பணிகளுக்கானவேலைஉத்தரவு 01,11.2026 முதல் வழங்குவதற்கு, ஒப்பந்த பணிவேலை உத்தரவு வழங்குவது சம்பந்தமான வேலைகள் பரிசீலனையில் இருந்து வருவதால், பொதுசுகாதார அவசியத்தை கருதியும் பொதுநலன் கருதியும் முன்பு வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தவேலை உத்தரவை ஒரு மாத காலத்திற்குழு அல்லது புதிய ஒப்ந்த வேலை உத்தரவு வழங்கப்படும் வரை நீட்டிப்பு செய்யவும், குறைந்த பட்ச ஊதிய சட்டம் 1948, ஈரோடு மாவட்டம் 2026-2027 ஆம் ஆண்டிற்கான பல்வேறு வகையான பகுதி நேரப்பணியாளர்களுக்கான ஊதியம் நாள் ஒன்றிற்குரூ. 376/- (94X4) நிர்ணயம் செய்து மாவட்ட ஆட்சியர் அறிவிக்கை ந.எண்.க.8004/2026/எ2. நாள்.25,06,2026 -ல் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே, 01.10.2026 முதல் 31.10.2026வரை ஒரு நாளைக்கு ரூ.376/- வீதம்)4hours/day) 104 (376x104x27) ரூ.10,55,808/-ம் பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் இவர்களுக்கான EPF 13% ரூ.1,37,255/-மற்றும் ESI 3.25% ரூ.34,314/-மற்றும் வெளிப்புற முகமைக்கான சேவைக்கட்டணம்)Service charges) 6.90% ரூ.72,851/ - மற்றும் சேவைக் கட்டணத்திற்கான வரி)Service Tax) 18% சேவை வரி ரூ.13,113/- செலவீனம் ஏற்படும் ஆக மொத்தம் ரூ.13,13,341/-ஆகும்உத்தேச செலவினம் கணக்கிடப்பட்டுளது.

மேற்படி செலவினத்திற்கு ஒரு மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும் அதற்குண்டான செலவினத் தொகை ரூ.13,13,341/-ற்கு அனுமதியை எதிர்நோக்கி மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. செலவினத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. ஒரு மாதங்களோ அல்லது வெளி ஆதார முகமை மூலம் தொடங்கும் நாள் இவற்றில் எது முன்னரோ அதுவரை அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.எச்.1/1114.2024 (ம-4)

599.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

46.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II குட்பட்ட வார்டு எண்.28, முனிசிபல் காலனி மற்றும் வார்டுஎண்.35, மேட்டூர் சாலை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பழைய சிறுபாலங்கள், குடிநீர் மாசுபாடு தொடர்பான சீரமைப்புப் பணிகள் மற்றும் வடிகால் அடைப்பு தொடர்பான புகார் சீரமைப்புப் பணிகளின் போது சேதமடைந்துள்ளன. தற்போது மேற்கண்ட இரு சிறுபாலங்களும் சேதமடைந்து, பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் பாதுகாப்பாக சென்று வருவதற்கு இடையூறாகவும், பாதுகாப்பற்ற நிலையிலும் உள்ளன. எனவே, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சாலைப் போக்குவரத்தின் சீரான இயக்கத்தை கருத்தில் கொண்டு, மேற்கண்ட இரு பழைய சேதமடைந்த சிறுபாலத்தினை அகற்றி, புதியசிறுபாலம்கட்டுவது அவசியமாகிறது.

எனவே, பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சீரான போக்குவரத்தின் அவசர அவசியம் கருதி, மேற்கண்ட பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4.70 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1 மாமன்றம் அனுமதிவழங்கலாம்.

2 பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

கோப்பு எண்.இ1./288/2026 (ம-2)

600.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

47.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2க்குட்பட்ட வார்டு எண்: 5,8,9,11,12,18,22 மற்றும் 28 ஆகிய பகுதிகளில் உள்ளகுடிநீர்விநியோகபகிர்மானகுழாய்கள், ஆழ்துளை மின்மோட்டார்கள், பொது கழிப்பிட மின்மோட்டார்கள் மற்றும் பொது கிணற்று மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணியினை 01.04.2026 முதல் 31.07.2026 வரை ரூ.20.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 22.01.2026 அன்று ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 13.02.2026 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கியிருந்த M/S Harish Engineering, Erode அவர்களின் (-) 0.06% குறைவான விலைவிகிதத்தை ஏற்று 29.01.2026 தேதியில் மாமன்ற தீர்மானம் எண். 48 வாயிலாக மாமன்றத்தில் அனுமதி பெறப்பட்டு M/S Harish Engineering, Erode ஒப்பந்ததாரருக்கு 17.02.2026 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மேற்கண்ட பணியினை நான்கு மாதத்திற்கு மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ 20.50 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகோரி நடவடிக்கையில் உள்ளது. எனவே இப்பபராமரிப்பு பணியினை 01.08.2026 முதல் 31.08.2026 வரை ஒரு மாத காலத்திற்கு ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே M/S Harish Engineering, Erode, மூலம் மேற்கொள்ளநீட்டிப்பு செய்ய பணியின்அவசரம் கருதி ரூ,5.12 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின்அவசரஅவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகுமேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1./124/.2026 (ம-2)

601.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

48.) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2க்குட்பட்ட வார்டுஎண்: 20,21,27,29,35,36 மற்றும் 37 ஆகிய பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள், ஆழ்துளை மின்மோட்டார்கள், பொது கழிப்பிட மின்மோட்டார்கள் மற்றும் பொது கிணற்று மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணியினை 01.04.2026 முதல் 31.07.2026 வரை ரூ.13.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 22.01.2026 அன்று ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 13.02.2026 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் வழங்கியிருந்த M/S. K.N.PRASANNA, Erode அவர்களின் (-) 0.29% குறைவான விலைவிகிதத்தை ஏற்று M/S. K.N.PRASANNA, Erode ஒப்பந்ததாரருக்கு 17.02.2026 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் மேற்கண்ட பணியினை நான்கு மாதத்திற்கு மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ 13.20 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகோரி நடவடிக்கையில்உள்ளது. எனவே இப்பபராமரிப்பு பணியினை 01.08.2026 முதல் 31.08.2026 வரை ஒரு மாதகாலத்திற்கு ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே M/S. K.N.PRASANNA, Erode, மூலம் மேற்கொள்ள நீட்டிப்பு செய்ய பணியின் அவசரம் கருதிரூ 3.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2, பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மாமன்ற அனுமதியை எதிர் நோக்கி மாண்புமிகுமேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.இ12/0123/.2026 (ம-2)

602.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

49.) : ஈரோடு மாநகராட்சி – மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி - ஓராண்டு மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்களுக்கு 23.09.2026 அன்று பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது உச்ச ஏலக் கேள்வி கோரியவர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க மாமன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக.

பொருள்

பார்வை : 1. பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாள்:23.09.2026

.....

ஈரோடு மாநகராட்சி 2026-2027 ஆம் ஆண்டுக்கான ஏலம் கோராத இனங்களுக்கு மறு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 23.09.2026 அன்று மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கீழ்க்கண்ட இனங்களுக்கு உச்சகேள்வி தொகை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள். இதர இனங்களுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை.

வரிசை எண்	குத்தகையினம்	உயர்ந்த பட்ச ஏலதாரர் பெயர் திரு / திருமதி	அரசாங்க மதிப்பு ரூ.	உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.
ஓராண்டு குத்தகை இனங்கள் (3 ஆண்டுகள் தொகுப்பு கால அளவு)				
1.	காந்திஜி ரோடு வணிக வளாகத்தில் அமைந்துள்ள LED DISPLAY விளம்பரம் செய்யும் பலகை	S.கலைவாணி	16,20,000/-	5,00,000/- (ஒப்பந்தப்புள்ளி)

மேற்கண்டுள்ள இனத்திற்கு 04.10.2024 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் அரசு மதிப்பு ரூ.16,20,000/- என நிர்ணயம் செய்யப்பட்டது. திரு.சுரேஷ் என்பவர் ஏலத்தில் கலந்து கொண்டு ரூ.16,30,000/- க்கு உச்ச ஏலக் கேள்வி கோரி ஏலம் எடுத்துள்ளார். மேலும், குறைவான விளம்பரங்களே ஒளிபரப்பு செய்யப்படுவதாலும், குத்தகைதாரருக்கு நஷ்டம் ஏற்படுவதாலும் தொடர்ந்து ஏல

இனத்தை நடத்த முடியவில்லை எனக்கூறி 31.03.2025 அன்று ஏல இனத்தை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்து விட்டார்.

பின்னர், இவ்வினத்தை 16 முறை தொடர்ந்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஒருவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. இந்நிலையில் 25.08.2026 அன்று நடைபெற்ற பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.கலைவாணி என்பவர் மட்டும் கலந்து கொண்டு ஓராண்டு குத்தகை தொகை ரூ.5,00,000/- க்கு என ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது அரசாங்க மதிப்பினை விட குறைவான தொகையாக உள்ளதாலும், ஒருவர் மட்டுமே பங்கு கொண்டதாலும், மீண்டும் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டு 23.09.2026 அன்று மறு பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் மீண்டும் திருமதி.கலைவாணி என்பவர் மட்டுமே பங்கு கொண்டு ரூ.5,00,000/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மிகவும் குறைவான ஒப்பந்தப்புள்ளி கேள்வியாக இருப்பினும், இவ்வினம் தொடர்ச்சியாக தற்போது 18 முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியும், யாரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள முன்வரவில்லை.

அ) எனவே, இவ்வினத்தில் மாநகராட்சிக்கு ஏற்பட்டு வரும் தொடர் நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு திருமதி.கலைவாணி என்பவரால் கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று குத்தகையினத்தை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக மாமன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ஆ) மேற்படி உறுதி செய்யப்படும் குத்தகை இனத்தை தவிர இதர இனங்களை மீண்டும் தொடர்ந்து மின் ஏலம்/ மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. 'அ' மாமன்றம் முடிவு செய்யலாம்.
2. 'ஆ' அனுமதிக்கலாம்.

கோப்பு எண். அ2/1609/2025 (மையம்)

603.) ஒத்தி வைக்கப்பட்டது.

50.) பொருள் : ஈரோடு மாநகராட்சி - மண்டலம் - 2 க்குட்பட்ட ஆர்.கே.வி ரோடு வணிக வளாகம் மற்றும் கனிமார்க்கெட் வணிக வளாகத்தில் பட்டாசு கடை அமைப்பது - தொடர்பாக

****

திரு.மு.தமிழன் என்பவர் தனது 28.08.2026 ஆம் தேதியிட்ட மனுவில் ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 2க்குட்பட்ட ஆர்.கே.வி ரோடு வணிக வளாகத்திற்கு முன்பு உள்ள காலியிடத்தில் பட்டாசு கடை அமைக்க கோரி மனு அளித்துள்ளார். திரு.B.அலிஜர் என்பவர் தனது 07.09.2026 ஆம் தேதியிட்ட மனுவில் ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 2 க்குட்பட்ட கனிமார்க்கெட் வணிக வளாகத்திற்கு அருகில் உள்ள காலியிடத்தில் பட்டாசு கடை அமைக்க கோரி மனு அளித்துள்ளார். மாநகராட்சிக்கு சொந்தமான இடங்கள் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும்.

எனவே, மேற்காணும் இவ்விரு இடத்திலும் 2000 சதுர அடி பரப்பளவில் கீழ்க்கண்ட குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு பட்டாசு கடை அமைத்துக் கொள்ள பொதுப்பணித்துறை கணக்கீட்டின் படி நிர்ணயம் செய்யப்பட்ட சதுரடிக்கான தினசரி வாடகை அடிப்படையில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கு ஏல வைப்புத் தொகையாக ரூ.500000/- நிர்ணயம் செய்யவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

வ. எண்	இடம்	மொத்த சதுர அடி	அரசு மதிப்பு சதுரடிக்கான வாடகை ரூ.	வைப்புத் தொகை ரூ.
1.	கனிமார்க்கெட் வணிக வளாகம் அருகில் உள்ள காலியிடம்	2000	77/-	500000/-
2.	ஆர்.கே.வி ரோடு வணிக வளாகம்அருகில் உள்ள காலியிடம்	2000	55/-	500000/-

நிபந்தனைகள்-

1. தீ விபத்தினை தடுக்க போதுமான தீயணைப்பு கருவிகள் அமைக்க வேண்டும். மேலும் தீயணைப்புத் துறையில் தடையின்மை சான்று பெற வேண்டும்.
2. பட்டாசு கடை நடைபெறும் காலங்களில் மாநகர நல அலுவலர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோர் ஆய்வு செய்ய வரும் பொழுது உரிய ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.
3. புகை பிடித்தல் தடை செய்யப்பட வேண்டும். புகைபிடிக்கக்கூடாது என தட்டிகள் எழுதி தகுந்த இடத்தில் வைக்கப்பட வேண்டும்.
4. நெருப்பு அல்லது பாதுகாப்பு இல்லாத மின்விளக்குகள் பயன்படுத்தக்கூடாது.
5. பட்டாசு எளிதில் தீ பற்றக்கூடியது என்பதால் தீ விபத்து ஏற்படா வண்ணம் பாதுகாப்பான முறையில் பணி) மேற்கொள்ளப்பட வேண்டும்.
6. முதலுதவிப்பெட்டிகள் வைக்கப்பட வேண்டும்.
7. பிரஸ்தாப இடத்தை ஒப்படைக்கும் பொழுது பழைய நிலையில் இருந்தாற் போலவே சமன்படுத்தி மீள மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும்.
8. நுழைவு வாயில் எளிதாக நுழையும் வண்ணம் அகலமாக அமைக்கப்பட வேண்டும்.
9. நுழைவு வாயில் முன்பு வரிசையாக நுழையும் வழி ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
10. நுழைவு வாயில் மட்டுமன்றி அவசர கால வழி ஒன்றும் அமைக்கப்பட வேண்டும்.
11. அனுமதிக்கப்பட்ட பரப்பளவை விட கூடுதலாக இடத்தை பயன்படுத்தக் கூடாது. உபயோகித்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

12. மின் இணைப்பை தங்கள் சொந்த பொறுப்பிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கான மின் கட்டணம் நிலுவையின்றி செலுத்தப்பட வேண்டும்.
13. மேற்காணும் நிபந்தனைகளை முழுமையாக பின்பற்றி கடை நடத்த வேண்டும். அசம்பாவித சம்பவங்கள் ஏதும் நிகழா வண்ணம் தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செய்து கொள்ள வேண்டும். எதிர்பாராத விதமாக ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படின், அதனால் ஏற்படும் சகலவிதமான விளைவிகளுக்கும் தாங்களே முழுப்பொறுப்பாவீர்கள்.
14. மேற்காணும் அனுமதியினை எவ்வித முன் அறிவிப்புமின்றி எந்த நேரத்திலும் ரத்து செய்ய ஆணையாளருக்கு முழு அதிகாரம் உள்ளது.

மேற்காணும் இவ்விரு இடத்திலும் பட்டாசு கடை அமைத்துக் கொள்ளும் உரிமம் மாநகராட்சியின் மேற்கண்ட குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பரச் செலவினங்களை ஏற்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ2/4682 /2026 (மையம்)

604.) அனுமதிக்கப்பட்டது

51,) ஈரோடு மாநகராட்சி - மூன்றாண்டு குத்தகை இனங்கள் – ஒப்படைப்பு செய்யப்பட்டது - மேற்படி ஒப்படைப்பு செய்யப்பட்ட கடைகளை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பொருள் :

பார்வை : உரிமதாரர்களின் விண்ணப்பம்.

.....

பார்வையில் கண்டுள்ள உரிமதாரர்களின் கடிதங்களில் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட கனிமார்க்கெட் வணிக வளாகம் மூன்றாம் தளம் திறந்த வெளிக் கடைகள், வியாபாரம் சரிவர நடைபெறாத காரணத்தினாலும், மாதாந்திர வாடகை தொகை செலுத்த இயலாத காரணத்தினாலும் கடைகளை திரும்ப ஒப்படைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார்கள். விபரம் பின்வருமாறு.

வ. எண்	உரிமதாரர்கள் பெயர்	கடையின் பெயர் மற்றும் கடை எண்	ஒப்படை செய்யப்பட்ட உரிம காலம்	விண்ணப்ப நாள்
1.	கனிமார்க்கெட் வணிக வளாக மூன்றாம் தளம் திறந்த வெளிக் கடை எண்.10	S.சிராஜ்தீன்	01.04.2024 முதல் 31.03.2027 வரை	17.08.2026
2.	கனிமார்க்கெட் வணிக வளாக மூன்றாம் தளம் திறந்த வெளிக் கடை எண்.26	S.சிராஜ்தீன்	01.04.2024 முதல் 31.03.2027 வரை	17.08.2026
3.	கனிமார்க்கெட் வணிக வளாக மூன்றாம் தளம் திறந்த வெளிக் கடை எண்.19	N.பர்வீஸ்	01.04.2024 முதல் 31.03.2027 வரை	17.08.2026
4.	கனிமார்க்கெட் வணிக வளாக மூன்றாம் தளம் திறந்த வெளிக் கடை எண்.70	G.பிரியா	01.04.2024 முதல் 31.03.2027 வரை	11.08.2026

வ.எண். 1 மற்றும் 2 – ல் கண்டுள்ள திரு.S.சிராஜ்தீன், என்பவர் 13.03.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏல வைப்புத் தொகை தலா ரூ.14,000/- செலுத்தி மண்டலம் - 2 க்குட்பட்ட கனிமார்க்கெட் வணிக வளாக மூன்றாம் தளக் திறந்த வெளிக் கடை எண். 10 மற்றும் 26 – யை உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.3000/- க்கு ஏலம் கோரி கடை எடுத்துள்ளார். மேற்படி மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கியதன் படி கடையினை ஒப்படைப்பு செய்ய 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை செலுத்தக் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. கடை எண்.10 - ற்கு 12 மாத வாடகை தொகை ரூ.36000/- (இரசீது எண். 056/202/3/24-25/0002659, நாள்.15.05.2024) அன்று செலுத்தப்பட்டுள்ளது. கடை எண்.26 - ற்கு 12 மாத வாடகை தொகை ரூ.36000/- (இரசீது எண். 056/202/3/24-25/0002660, நாள்.15.05.2024) அன்று

செலுத்தப்பட்டுள்ளது. குத்தகைதாரர் கடையை தொடர்ந்து நடத்த முடியாத சூழல் காரணமாக 17.08.2026 அன்று இரு கடைகளையும் மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து விட்டார்.

வ.எண். 3- ல் கண்டுள்ள திருமதி.N.பர்வீஸ் என்பவர் 13.03.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏல வைப்புத் தொகை ரூ.14,000/- செலுத்தி மண்டலம் - 2 க்குட்பட்ட கனிமார்க்கெட் வணிக வளாக மூன்றாம் தளக் திறந்த வெளிக் கடை எண்.19- யை உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.3000/- க்கு ஏலம் கோரி கடை எடுத்துள்ளார். மேற்படி மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கியதன் படி கடையினை ஒப்படைப்பு செய்ய 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை செலுத்தக் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. கடை எண்.19 - ற்கு 12 மாத வாடகை தொகை ரூ.36000/- (இரசீது எண். 056/202/3/24-25/0002851, நாள்.17.05.2024) அன்று செலுத்தப்பட்டுள்ளது. அன்று செலுத்தப்பட்டுள்ளது. குத்தகைதாரர் கடையை தொடர்ந்து நடத்த முடியாத சூழல் காரணமாக 17.08.2026 அன்று கடையை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து விட்டார்.

வ.எண். 4- ல் கண்டுள்ள திருமதி.G.பிரியா என்பவர் 13.03.2024 அன்று நடைபெற்ற பொது ஏலத்தில் கலந்து கொண்டு ஏல வைப்புத் தொகை ரூ.14,000/- செலுத்தி மண்டலம் - 2 க்குட்பட்ட கனிமார்க்கெட் வணிக வளாக மூன்றாம் தளக் திறந்த வெளிக் கடை எண்.70- யை உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.3000/- க்கு ஏலம் கோரி கடை எடுத்துள்ளார். மேற்படி மாமன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கியதன் படி கடையினை ஒப்படைப்பு செய்ய 12 மாத வாடகை முன் வைப்புத் தொகை செலுத்தக் கோரி அறிவிப்பு வழங்கப்பட்டது. கடை எண்.70 - ற்கு 12 மாத வாடகை தொகை ரூ.36000/- (இரசீது எண். 056/202/3/23-24/0008859, நாள்.13.03.2024) அன்று செலுத்தப்பட்டுள்ளது. அன்று செலுத்தப்பட்டுள்ளது. குத்தகைதாரர் கடையை தொடர்ந்து நடத்த முடியாத சூழல் காரணமாக 11.08.2026 அன்று கடையை மாநகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து விட்டார்.

மேற்படி மாநகராட்சிக்கு திரும்ப உரிம இனங்களை ஒப்படைப்பு செய்துள்ளார்கள். குத்தகை உரிம இனங்களுக்கு உரிமதாரர்களால் மாநகராட்சிக்கு

செலுத்த வேண்டிய வாடகைத் தொகையினை அவர்கள் செலுத்தியுள்ள வைப்புத் தொகையில் இருந்து சரிகட்டவும், குத்தகை உரிமத்தை ரத்து செய்து, பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை தொகை ஏதும் நிலுவை இருப்பின் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொண்டு வசூலிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ2/1609/2024/ (மையம்)

605.) அனுமதிக்கப்பட்டது

52.) ஈரோடு மாநகராட்சி மீனாட்சி சுந்தரனார் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கனிமார்கெட் வணிக வளாகம் கட்டப்பட்டு கடைகள் இயங்கி வருகிறது. மேற்படி வளாகத்தில் பொதுமக்களின் வசதிக்காக 5 எண்ணிக்கை மின்பளு தூக்கிகள் (Electrical Lift) அமைக்கப்பட்டுள்ளது. இந்த Lift-கள் அனைத்தையும் தொடர் பராமரிப்பில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி Lift-கள் அனைத்தும் M/s.Johnson Lifts Private Limited, Coimbatore நிறுவனத்தின் தயாரிப்பு ஆகும். எனவே மேற்கண்ட மின்பளு தூக்கிகளுக்கு (Electrical Lift) பராமரிப்பிற்கு தேவையான உதிரி பொருட்கள் M/s.Johnson Lifts Private Limited, Coimbatore நிறுவனத்தின் மூலமே கிடைக்கும் என்பதால் அந்நிறுவனத்தின் மூலமே ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் வாயிலாக பராமரிக்கப்பட்ட வருகிறது. இப்பராமரிப்பு ஒப்பந்தம் 31.08.2026 தேதியுடன் முடிவடைகிறது.

மேற்கண்ட 5 எண்ணிக்கை மின்பளு தூக்கிகளை (Electrical Lift) எவ்வித குறைபாடுகளுமின்றி தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு நல்லமுறையில் இயக்கினால்தான் மின் ஆய்வாளரால் உரிமம் புதுப்பித்து இயக்குவதற்கு அனுமதி அளிக்கப்படும். 5 எண்ணிக்கை மின்பளு தூக்கிகளுக்கு (Electrical Lift) செப்டம்பர்

2026 முதல் நவம்பர் 2026 வரை மூன்று மாதங்களுக்கு இயக்கி பராமரிப்பதற்கான செலவு விபரம் பின்வருமாறு.

S.No	Lift No	பராமரிப்பு கட்டணம் ரூ.	GST 18% ரூ.	மொத்த கட்டணம் ரூ.
1	L-P8215	32200	5796	37996
2	L-P8216	32200	5796	37996
3	L-P8217	32200	5796	37996
4	L-P8218	32200	5796	37996
5	L-P8219	32200	5796	37996
	Total	**1,61,000**	**28,980**	**1,89,980**

எனவே, மேற்கண்ட நிறுவனத்திற்கு செப்டம்பர் 2026 முதல் நவம்பர்-2026 வரை மூன்று மாதங்களுக்கு (Electrical Lift) மின்பளு தூக்கிகளை இயக்கி பராமரிப்பதற்கு பணி ஆணை நீட்டிப்பு செய்திடவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.1,89,980/- ஐ மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக்குறிப்பு:.

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/5092/2025 (ம-2)

606.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

53,) ஈரோடு மாநகராட்சி மீனாட்சி சுந்தரனார் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் கனிமார்கெட் வணிக வளாகம் கட்டப்பட்டு கடைகள் இயங்கி

வருகிறது. மேற்படி வளாகத்தில் பொதுமக்களின் வசதிக்காக 6 எண்ணிக்கை நகரும் படிக்கட்டுகள் (Escalator) அமைக்கப்பட்டுள்ளது. இந்த Escalator-கள் அனைத்தையும் தொடர் பராமரிப்பில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. மேற்படி Escalator-கள் அனைத்தும் M/s.Johnson Lifts Private Limited, Coimbatore நிறுவனத்தின் தயாரிப்பு ஆகும். எனவே மேற்கண்ட 6 எண்ணிக்கை நகரும் படிக்கட்டுகளுக்கு பராமரிப்பிற்கு தேவையான உதிரி பொருட்கள் M/s.Johnson Lifts Private Limited, Coimbatore நிறுவனத்தின் மூலமே கிடைக்கும் என்பதால் அந்நிறுவனத்தின் மூலமே ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் வாயிலாக பராமரிக்கப்பட்ட வருகிறது. இப்பராமரிப்பு ஒப்பந்தம் 31.08.2026 தேதியுடன் முடிவடைகிறது.

மேற்கண்ட 6 எண்ணிக்கை நகரும் படிக்கட்டுகளை (Escalator) எவ்வித குறைபாடுகளுமின்றி தொடர் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு நல்லமுறையில் இயக்கினால்தான் மின் ஆய்வாளரால் உரிமம் புதுப்பித்து இயக்குவதற்கு அனுமதி அளிக்கப்படும். 6 எண்ணிக்கை நகரும் படிக்கட்டுகளுக்கு (Escalator) செப்டம்பர் 2026 முதல் நவம்பர் 2026 வரை மூன்று மாதங்களுக்கு இயக்கி பராமரிப்பதற்கான செலவு விபரம் பின்வருமாறு.

S.No	Escalator No	பராமரிப்பு கட்டணம் ரூ.	GST 18% ரூ.	மொத்த கட்டணம் ரூ.
1	E-8783	35950	6471	42421
2	E-8784	35950	6471	42421
3	E-8785	35950	6471	42421
4	E-8786	35950	6471	42421
5	E-8787	35950	6471	42421
6	E-8788	35950	6471	42421
	Total	215700	38826	254526

எனவே, மேற்கண்ட நிறுவனத்திற்கு செப்டம்பர் 2026 முதல் நவம்பர்-2026 வரை மூன்று மாதங்களுக்கு Escalator நகரும் படிக்கட்டுகளை இயக்கி பராமரிப்பதற்கு பணி ஆணை நீட்டிப்பு செய்திடவும், அதற்காகும் செலவுத் தொகை ரூ.2,54,526/- ஐ மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:.

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

கோப்பு எண்.இ1/5092/2025 (ம-2)

607.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

54,) ஈரோடு மாநகராட்சி ஆணைக்கல்பாளையம் ஆயுதப்படை மைதானத்தில் 80-வது சுதந்திர தினவிழா (15.08.2026) நடைபெறுவதையொட்டி, சுதந்திர தினவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் அலுவலர்கள் அமர்வதற்காக VIP சேர்கள், சாமியானா பந்தல் அமைத்தல், பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக வாடகை அடிப்படையில் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 6 எண்ணிக்கையிலான பி.வி.சி. தண்ணீர் தொட்டிகள் அமைத்தல், Glass Tea Poy, Floor Red Carpet, பள்ளி மாணவர்கள் மற்றும் காவல்துறையினர் காலை சிற்றுண்டிக்குப் பின் கைகழுவும் வசதிக்காக SS Wash Basin அமைத்தல் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற ஏதுவாக ஆயுதப்படை மைதானத்தை சமன்படுத்தி தண்ணீர் தெளித்து சீரமைத்தல் உள்ளிட்ட அடிப்படைவசதிகளை மேற்கொள்ள ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.18800/2026/அ7 நாள்.10.08.2026-ன் படி உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஆயுதப்படை மைதானத்தில் சுதந்திர தின விழாவிற்கு தேவையான வசதிகள் செய்யும் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள்(திருத்த) சட்டம் 2022 (தமிழ்நாடு சட்டம் 35/2022) இதன்படி

திருத்தப்பட்ட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 -ன் 57(7) - வது பிரிவின் கீழ் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.என்,ஆறுமுகம், ஒப்பந்ததாரர் ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,54,698/- ஐ, திரு.என்,ஆறுமுகம், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண். இ1/1806 /2026 (ம-4)

608) பதிவு செய்யப்பட்டது.

55,) பொருள்: பணியமைப்பு - ஈரோடு மாவட்டம் - புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டம் - பள்ளி சததுணவு மையத்தில் காலியாக உள்ள சமையல் உதவியாளர் பணியிடம் - சத்துணவு பணி பாதிக்கப்படாத வண்ணம் மாநகராட்சி பொது நிதி மூலம் தினக் கூலி அடிப்படையில் சமையலரை பூர்த்தி செய்து உத்திரவு வரப்பெற்றது - பணியில் சேர்த்துக் கொள்ள அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை: ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1174/2026/பஅ5, நாள்.27.07.2026.

.....

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட சத்துணவு மையங்களில் காலியாக உள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களை சத்துணவு வழங்குவதில் ஏற்படக்கூடிய சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு, பள்ளி சத்துணவு மையங்களில் உணவு உண்ணும் மாணவர்களுக்கு குறித்த நேரத்தில் மதிய உணவு சமைத்திடும் வகையில் தற்காலிக பணியாளரை சமையல் செய்ய ஏதுவாக தினக்கூலி அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.150/-வீதம் அந்தந்த வட்டாரங்களில் ஊராட்சி

ஓன்றிய பொதுநிதியிலும் மற்றும் மாநகராட்சி / நகராட்சிகள் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ளவும், இம்மாநகராட்சிக்குட்பட்ட பள்ளிகளில் காலியாக உள்ள 6 சமையல் உதவியாளர் பணியிடங்களை வரப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் அரசால் புதிதாக சமையல் உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்படும் நாள் அல்லது நடப்பு கல்வியாண்டு முடிவடையும் நாள்ஆகியவற்றில் எது முன்னதாக அமைகிறதோ அது வரை மட்டும் நிரப்பிக்கொள்ள பார்வையில் காணும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.150/-வீதம் தற்காலிகமாக நிரப்பிக்கொள்வதற்கும், அதனால் ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி கல்விநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு. எண்.3845/2026/(மையம்)

609.) அனுமதிக்கப்பட்டது

56,) பொருள் : ஈரோடு மாநகராட்சி - பொது சுகாதாரம் - மாநகராட்சி எல்லைக்குள் பெரும் எண்ணிக்கையில் சுற்றித்திரியும் தெருநாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை நான்காம் கட்டமாக மேற்கொள்ள அனுமதி கோருதல் - தொடர்பாக

பார்வை :

1. ஆணையாளர் அவர்களின் செயல்முறை உத்தரவு : 27.02.2024.
2. கால்நடை வளர்ப்பு பால்வளம் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் துறை அரசாணை எண். G.0(4D)No.01, நாள் : 17.03.2023.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.எண்.க. 20383/2022/எச் 1, நாள் :07.09.2023.
4. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் : 08.01.2024 மற்றும் 10.01.2024
5. இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை பணிக்கு Animal

Helping Hands அமைப்பிற்கு வேலை உத்தரவு வழங்கிய நாள் : 10.01.2024.

6. Animal Helping Hands அமைப்பிடமிருந்து ஒப்பந்த பத்திரம் வரப்பெற்ற நாள் : 11.01.2024.
7. மாமன்ற தீர்மான எண். 200, நாள் : 16.02.2024.
8. மாமன்ற தீர்மான எண். 647, நாள் : 25.10.2024.

*****

ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் பெரும் எண்ணிக்கையில் சுற்றித்திரியும் தெருநாய்களால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களை தவிர்க்கும் பொருட்டு மாநகரப்பகுதியில் கணக்கெடுக்கப்பட்ட சுமார் 21770 தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் பொருட்டும், இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்தல் பணியை தேசிய விலங்குகள் நல வாரியம் மற்றும் தேசிய விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு விதிகளின்படி தகுந்த பயிற்சி பெற்ற கால்நடை மருத்துவர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பார்வை 7 மற்றும் 8இல் காணும் மாமன்ற தீர்மானத்தில், முதற்கட்டமாக 5000 எண்ணிக்கையிலும், இரண்டாம் கட்டமாக 5000 எண்ணிக்கையிலும், மூன்றாம் கட்டமாக 5000 எண்ணிக்கையிலும், அறுவை சிகிச்சை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது அதன் .விவரம் பின்வருமாறு.

முதல் கட்டம், இரண்டாம் கட்டம் மற்றும் மூன்றாம் கட்டமாக மொத்தம் 14917 தெருநாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிசிக்சை பணிகள் முடிக்கப்பட்டுள்ளதுமூன்றாம் கட்ட பணிகள் தற்போது முடிவுறும் தருவாயில் . .இறுதிகட்டத்தில் உள்ளது

தற்போது நான்காம் கட்டமாக 5000 தெருநாய்களுக்கு இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்யும் பணியினை மேற்கொள்ள தேசிய விலங்குகள் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமான International Trust of

Peace உடன் இணைந்த Animals Helping Hands என்ற நிறுவனத்தை கொண்டு மாநகராட்சி நிர்வாகத்தின் மூலமாக

மேற்கொள்ள வேண்டியுள்ளதுஅதற்கான உத்தேச செலவினம் . .ரூ82,50,000/- ஆகும்லவினத்திற்கும்செ ., பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் . .மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு.

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.எச்3.3340.2022 (மையம்)

610.) அனுமதிக்கப்பட்டது

57.) பொருள் — ஈரோடு மாநகராட்சி மண்டலம் - 1க்குட்பட்ட வீரப்பன்சத்திரம் மாநகராட்சி கட்டிடத்தில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்களின் கைத்தறிதுறை மற்றும் சட்டமன்ற பணிகளை மேற்கொள்ள அலுவலகம் ஒதுக்கீடு செய்து வழங்க கோரியுள்ளது - தொடர்பாக.

பார்வை — உதவி இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) கைத்தறிதுறை, ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண். 900/2026/ஏ, நாள். 15-09-2026

.....

பார்வையில் காணும் ஈரோடு கைத்தறித்துறை உதவி இயக்குநர் அவர்கள துகடிதத்தில் குறிப்பிட்டுள்ள வீரப்பன்சத்திரம் மாநகராட்சி அலுவலக கட்டிடம், மண்டலம்-1க்குட்பட்ட பிரிவு அலுவலக கட்டிடம்ஆகும். இக்கட்டிடத்தில் கீழ்தளத்தில் சுகாதாரப்பிரிவும் மற்றும் வசூல் மையமும், முதல்தளத்தில் பொறியியல் பிரிவும் செயல்பட்டு வருகிறது. ஈரோடு கைத்தறித்துறை உதவி இயக்குநர்அவர்கள், மேற்காணும் பார்வையில் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர்அவர்களுக்கு அலுவலக பணிக்கு வீரப்பஞ்சத்திரம் அலுவலகம் மண்டலம் - 1பிரிவு அலுவலகத்தில் அறை ஒதுக்கீடு செய்துதருமாறு கோரியுள்ளார்கள்.

இக்கட்டிடத்தில் முதல் தளத்தில்காலியாக உள்ள பகுதியினை கைத்தறித்துறை அலுவலக பயன்பாட்டிற்கு அளிக்கவும், இக்கட்டிடம்கட்டி 20-ஆண்டுகளுக்கு மேல் ஆனதால்கட்டிடத்தின் மேற்கூரையை ஆங்காங்கே பழுதுடைந்த நிலையில் உள்ளமையால் கட்டிடத்தின் மேற்கூரையை மற்றும் இதர பராமரிப்புபணிகளை மேற்கொள்ள தயார்செய்யப்பட்டஉத்தேசமதிப்பீடு ரூ.16.50 இலட்சம்ஆகும். எனவே, இப்பணியினை மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.இ1./2471.2026 (ம-1)

611.) இரத்து செய்யப்பட்டது.

58,) ஈரோடு மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் சிப்பம்-5ல் கட்டி முடிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (50.55 MLD கொள்ளளவு) வடிவமைத்து கட்டுமானம் செய்து, இயக்குதல் மற்றும் பராமரிப்பு (O&M) பணிகளை ஐந்து ஆண்டுகளுக்கு D.B.O.T முறையில் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டு, ஆறுமாத சோதனை ஓட்டம் (Trial Run) முடிந்த பிறகு, ஐந்து ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு (O&M) பணிகள் தொடா:ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் 19.12.2025 அன்று நடைபெற்ற காணொளி காட்சி கூட்டத்தில் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை அவர்கள் கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்வதற்கு one city one operator என்ற வழிகாட்டு முறையில் KPI அடிப்படையில் ஒப்பந்த விதிமுறைகள் உருவாக்க அரசால் நியமிக்கப்பட்ட கலந்தாலோசகர் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிற்கும் நேரில் சென்று கழிவு சுத்திகரிப்பு தொழில் நுட்பவகையினை (Type of treatment technology) ஆய்வு செய்து அதற்கேற்றார்போல் பொதுவான விதி முறைகளை (Common rules) உருவாக்க அறிக்கை தயார் செய்ய தரவேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

தற்சமயம், மேற்கண்ட இயக்குதல் மற்றும் பராமரிப்பு (O&M) பணிகள் மேற்கொண்டு வரும் திருவாளர். RAMKY INFRASTRUCTURE LIMITED, Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்த காலம் 31.03.2026 தேதியுடன் முடிவடைந்து மேலும், மூன்று மாதகாலத்திற்கு பணி நீட்டிப்பு செய்த நிலையில் 30.06.2026 தேதியுடன் முடிவடைகிறது.

எனவே புதியதாக டெண்டர் கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை மேலும், மூன்று மாதங்களுக்கு எனவே புதியதாக டெண்டர் கோரி வேலை உத்திரவு வழங்கும் வரை மேலும், ஆறு மாதங்களுக்கு 01.07.2026 முதல் 31.12.2026 வரையிலோ அல்லது அரசாணை எண் 113, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப. 3) துறை, நாள் 17.08.2022-ன் படி KPI (key performance Indicator) முக்கிய செயல்திற குறியீடுகள் நிர்ணம் செய்து இயக்கி பராமரிப்பு குறித்து உரிய வழிமுறைகள் அரசின் ஒப்புதல் பெற்று விரைவில் வெளியிடப்படும் வரை இம்மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தினை (50.55 MLDகொள்ளளவு) இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தற்சமயம் மேற்கொண்டு வரும் திருவாளர். RAMKY INFRASTRUCTURE LIMITED, Chennai நிறுவனத்தார் ஒப்பந்த அடிப்படையில், ஏற்கனவே வழங்கியுள்ள விலைவிகித்திலேயே ஆறு மாதங்களுக்கு 01.07.2026 முதல் 31.12.2026 வரையிலோ அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள KPI வழிமுறைகள் அரசினரால் பிறப்பிக்கப்படும் தேதி வரையிலோ இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.43.51 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்.இ4/6459/2010 (மையம்)

612.) அனுமதிக்கப்பட்டது

59.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வார்டுஎண். 15-க்குட்பட்ட பிச்சைக்காரன்பள்ளம் ஓடை, சத்திமெயின் ரோடு உயர் மட்ட பாலம் முதல் பி.பெஅக்ரஹாரம் காளிங்கராயன் வாய்க்கால் பாலம் வரை உள்ள மல்லிநகர், அன்னை சத்யா நகர், திருவள்ளுவர் வீதி, நெசவாளர் காலனி , பாவேந்தர் வீதி மற்றும் பெரியார் வீதி வழியாக காவேரி ஆறுவரை 2.90 கி.மீ நீளம்முள்ள ஓடையில் அதிக அளவில் திடக்கழிவுகள் முட்புதர்கள் மற்றும் செடிகொடிகள் வளர்ந்து ஓடையில் கொசு உற்பத்தியாகி பொதுசுகாதாரகேடு விளைவிக்க கூடியதாகவும், பருவ மழைகாலங்களில் கன மழை ஏற்படும்போது அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர்புகுந்து அங்கு வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படக்கூடும். எனவே ஓடையில் உள்ள நீரோட்டத்திற்கு தடையாக உள்ள திடக்கழிவுகள் மற்றும் செடிகொடிகள் போன்ற கழிவுகளை இயந்திரங்களை கொண்டு அகற்றிடவும், ஓடைநீர் தடையில்லாமல் செல்லும் வகையில் அகலப்படுத்துவதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகைரூ 3.85 இலட்சம் ஆகும். எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

1, மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகோரிநடவடிக்கைமேற்கொண்டதற்குமாமன்றம்பின்னேற்புஅனுமதிவழங்கலாம்.

கோப்புஎண்:E1/2454/2026 (ம-1)

613.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

60.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வார்டு எண். 1, 3 மற்றும் 4 -க்குட்பட்ட சுண்ணாம்பு ஓடை முதல் சித்தோடு பேருந்து நிறுத்தம் வரை சொட்டையம்பாளையம் , மரவபாளையம் மற்றும் வீரபன்னாடி வீதிகள் 6.00 கி.மீ நீளம் முள்ள ஓடையில் அதிக அளவில் திடக்கழிவுகள் முட்புதர்கள் மற்றும் செடி கொடிகள் வளர்ந்து ஓடையில் கொசு உற்பத்தியாகி பொது சுகாதார கேடு விளைவிக்க கூடியதாகவும், பருவமழை காலங்களில் கனமழை ஏற்படும் போது அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து அங்கு வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படக்கூடும். எனவே ஓடையில் உள்ள நீரோட்டத்திற்கு தடையாக உள்ள திடக்கழிவுகள் மற்றும் செடி கொடிகள் போன்ற கழிவுகளை இயந்திரங்களை கொண்டு அகற்றிடவும், ஓடைநீர் தடையில்லாமல் செல்லும் வகையில் அகலப்படுத்து வதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ 4.50 இலட்சம் ஆகும். எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

1,, மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்:இ1/2455/ 2026 (ம-1)

614.) அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

61.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-1 வார்டு எண். 1 மற்றும் 2 -க்குட்பட்ட பெருமாள்மலை அருகிலுள்ள ஓடை NH-47 தேசிய நெடுஞ்சாலை முதல் காவேரி ஆறுவரையிலும், கூட்டுறவுகாலனி முதல் பெருமாள்மலை வீதிகள் வரை 3.50 கி.மீ நீள முள்ள ஓடையில் அதிக அளவில் திடக்கழிவுகள் முட்புதர்கள் மற்றும் செடிகொடிகள் வளர்ந்து ஓடையில் கொசு உற்பத்தியாகி பொது சுகாதார கேடு

விளைவிக்க கூடியதாகவும், பருவமழை காலங்களில் கனமழை ஏற்படும்போது அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து அங்கு வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படக்கூடும். எனவே ஓடையில் உள்ள நீரோட்டத்திற்கு தடையாக உள்ள திடக்கழிவுகள் மற்றும் செடிகொடிகள் போன்ற கழிவுகளை இயந்திரங்களை கொண்டு அகற்றிடவும், ஓடைநீர் தடையில்லாமல் செல்லும் வகையில் அகலப்படுத்து வதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ2.75 இலட்சம் ஆகும். எனவே, பணியின் அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1, மாமன்றம் அனுமதிவழங்கலாம்

2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ1/2453/ 2026 (ம-1)

615.) அலுவலககுறிப்புஅனுமதிக்கப்பட்டது

62.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 வார்டு எண்.9க்குட்பட்ட பிச்சைக்காரன் பள்ளம் ஓடை முதல் சத்தி மெயின் ரோடு உயர் மட்ட பாலம் வரை உள்ள ஓடையில் அதிக அளவில் திடக் கழிவுகள் முட்புதர்கள் மற்றும் செடி கொடிகள் வளர்ந்து ஓடையில் கொசு உற்பத்தியாகி பொது சுகாதார கேடு விளைவிக்க கூடியதாகவும், பருவமழை காலங்களில் கனமழை ஏற்படும்போது அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து அங்கு வசிக்கும் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உருவாக கூடியதாகவும் உள்ளது. எனவே ஓடையில் உள்ள நீரோட்டத்திற்கு தடையாக உள்ள திடக்கழிவுகள் மற்றும் செடி கொடிகள் போன்ற கழிவுகளை அகற்றிடவும், ஓடைநீர் தடையில்லாமல் செல்லும் வகையில் அகலப்படுத்துவதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.4.80 இலட்சம் ஆகும். எனவே பணியின் அவசியம் கருதி மேற்படி பணிகளை மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்

2. மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்பு எண்: இ1/2417/2026 (ம-2)

616.) அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

63.) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 க்குட்பட்ட வார்டு எண்.21, திலகர் வீதியில் பொதுமக்களின் நீர் தேவைக்காக அமைக்கப்பட்டுள்ள **கைப்பம்பு (Handpump)** தற்போது தண்ணீர் கிடைக்காததால் பயன்பாடற்ற நிலையில் உள்ளது. இதனால் அப்பகுதி பொதுமக்களிடமிருந்து நீர் வழங்க கோரி தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேற்கண்ட இடத்திலிருந்து சுமார் 70 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பயன்பாட்டிலுள்ள மற்றொரு ஆழ்துளைக் கிணற்றிலிருந்து கூடுதலாக குழாய் மற்றும் PVC Syntax tank அமைப்பதன் மூலம் திலகர் வீதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்க இயலும். இதன் மூலம் பயன்பாடற்ற நிலையில் உள்ள கைப்பம்பிற்கு மாற்றாக அப்பகுதி பொதுமக்களின் நீர் தேவையை பூர்த்தி செய்ய இயலும்.

எனவே, திலகர் வீதி பொதுமக்களின் நீர் தேவையை கருத்தில் கொண்டு, அருகிலுள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து கூடுதல் நீர் குழாய் மற்றும் PVC Syntax tank அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேசமதிப்பீட்டு தொகைரூ.1.05 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு.

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

கோப்புஎண்: இ1/2920/2026 (ம-2)

617.) அனுமதிக்கப்பட்டது

மேயர். 29/9/26

இடம்- ஈரோடு **ஈரோடு மாநகராட்சி.**

நாள். 29.09.2026

29/9/26